DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1 TIRUPPUR.

சி.சி.எண்.719/2022

அ.சா.6, அண்ணாதுரை

**நாள் – 18.07.2023**

தொடங்கப்படும் நேரம் 2.10 பிற்பகல்

எதிரி முனீஸ்வரன் (எ) உதப்பி ஆஜர் ஆகியுள்ளார்.

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மேற்கொள்ளப்படும் குறுக்குவிசாரணை**

வழக்குச் சொத்தான மொபைல்போன் புகார்தாரருடையது என்பதை காட்டுவதற்கு புகார்தாரரிடம் இருந்து பில் எதையும் பெற்றேனா என்றால் இல்லை. புகார்தாரர் இரயிலில் பயணம் செய்யும்போது எந்த இடத்தில் இரயில் வந்து கொண்டிருந்தபோது செல்போனை சார்ஜ் போட்டார் என்ற விபரத்தை கூறினாரா என்றால் கூறவில்லை. புகார்தாரர் எந்த பர்தத்தில் படுத்து பயணம் செய்தார் என்ற விபரத்தை புகாரிலோ எனது விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவமானது இரவு 9.00 மணியில் இருந்து 10.00 மணிக்குள்ளாக நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில் அந்த நேரத்தில் அந்த கம்பார்ட்மெண்டில் இருந்த எல்லோரும் தூங்கியிருக்கமாட்டார்கள் என்றும், அந்த கம்பார்ட்மெண்டானது முன் பதிவு செய்யப்பட்ட பெட்டி என்பதால் அதற்குள் மூன்றாம் நபர்கள் சென்று போனை எடுத்திருக்க வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரிதான். அது தொலைதூரம் செல்லக்கூடிய இரயில் என்பதால் அதில்

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

G BHARATHI PRABHA — Digitally signed by G BHARATHI PRABHA Date: 2023.07.18 19:09:00 +0530

Judicial Magistrate No.I,
Tiruppur.

பாதுகாப்பு பணியில் போலீஸ் ஈடுபட்டிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. அது தொலைதூரம் செல்லும் இரயில் என்பதால் போலீஸ் யாரும் இருக்க மாட்டார்கள். புகார்தாரர் பயணம் செய்ய பர்த் அருகே பயணம் செய்த மற்ற பயணிகளை இவ்வழக்கின் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி பிளாட்பார்மில் இருந்தார் என்பதை காட்டுவதற்கான கண்காணிப்பு கேமரா பதிவுகள் எதையும் கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அந்த இரயில் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் இயங்கவில்லை. புகார் கொடுத்த நான்கு மாதங்களுக்கு பின்னிட்டுத்தான் எதிரியை கைது செய்தேன் என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன இடத்தில் வைத்து எதிரியை சாட்சிகள்முன்னிலையில் விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும் அதனடிப்படையில் சான்று பொருள் எதையும் கைப்பற்றவில்லை என்று எதிரியை கைது செய்யவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் மகஜர் சாட்சிகள் அனைவரும் எங்கள் காவல் நிலையத்தின் கையிறுப்பு சாட்சிகள் என்ற சொன்னால் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரிக்கு எதிராக தவறான இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

G BHARATHI PRABHA

Digitally signed by G BHARATHI PRABHA
Date: 2023.07.18 19:09:08 +0530

Judicial Magistrate No.I,
Tiruppur.